# ‘நீட்’ தனது வாக்குறுதியில் தோற்றுவிட்டது; மாநிலங்களை நம்பும் காலம் வந்துவிட்டது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கட்டுரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தப் பிரச்சினைகளை தொடக்கத்திலேயே உணர்ந்த மாநிலம் தமிழ்நாடு. அதன் விளைவாக, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் குழு ஒன்றை அமைத்தோம். அந்தக் குழு, ‘நீட்’ மருத்துவக் கல்வித் தரத்தை மேம்படுத்தவும் இல்லை, சமூகநீதியை உறுதிப்படுத்தவும் இல்லை என்ற தெளிவான முடிவுக்கு வந்தது.

இதன் அடிப்படையில், நீட்டிலிருந்து விலக்கு கோரி தமிழ்நாடு சட்டப்பேரவை ஒருமனதாக மசோதாவை நிறைவேற்றியது. ஆனால், ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்திவைத்தார். மாநிலம் முன்வைத்த கவலைகளின் சாரத்தைப் புரிந்துகொண்டு ஆக்கப்பூர்வமாக அணுக ஒன்றிய அரசும் முன்வரவில்லை.

### மாநிலங்களைத்தான் நம்ப வேண்டும்!

**கல்வி நிறுவனங்களை நிறுவவும், ஆசிரியர்களை நியமிக்கவும், கல்வித் தரத்தைப் பராமரிக்கவும், மருத்துவக் கல்விக்கு நிதியளிக்கவும் மாநிலங்களை நம்பும்போது, அவற்றின் கல்வி முறைகளுக்கும் சமூகநீதிக் கொள்கைகளுக்கும் ஏற்ப மாணவர் சேர்க்கையைத் தீர்மானிக்கும் அதிகாரத்திலும் மாநிலங்களைத்தான் நம்ப வேண்டும்.**

பள்ளிக் கல்வியை வலுப்படுத்துதல், பள்ளிக் கல்வி வாரியங்களின் மதிப்பீடுகள் மீதான நம்பிக்கையை மீட்டெடுத்தல், மாநிலங்கள் தங்களின் அரசியலமைப்புச் சட்டப் பொறுப்புகளுக்கும் உள்ளூர்ச் சூழல்களுக்கும் ஏற்ற மாணவர் சேர்க்கைக் கொள்கைகளை வகுக்க அனுமதித்தல் ஆகியவற்றில்தான் தீர்வு உள்ளது. வெவ்வேறு கல்வி வாரியங்கள் வழங்கும் மதிப்பெண்களைப் புள்ளியியல் சமநிலைப்படுத்தல் முறையின் மூலம் நியாயமாக ஒப்பிட முடியும்.

நீட்டிலிருந்து விலக்கு கோரும் மாநிலங்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட வேண்டும். மாணவர் சேர்க்கை முறைகளில் நிலவும் பன்முகத்தன்மையால் கல்வித் தரம் பாதிப்படையாது. மாறாக, அது சமத்துவத்தையும் சிறப்பான வெளிப்பாட்டையும் மேலும் வலுப்படுத்தக்கூடும்.

### மத்திய தொகுப்புக்கு மாற்றுவது சமூக நீதியைப் பலவீனப்படுத்துவதாகும்!

**அவசரமாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய மற்றொரு முக்கிய அம்சம் அகில இந்திய ஒதுக்கீடு (AIQ) முறையாகும். நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உருவான இந்த முறை, மாநிலங்களின் நிதியில் உருவாக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி இடங்களில் ஒரு பகுதியை மத்தியத் தொகுப்பிற்கு மாற்றுகிறது. இதன் மூலம் கூட்டாட்சித் தத்துவம் மற்றும் சமூகநீதி ஆகியவை பலவீனப்படுத்தப்படுகின்றன.**

குறிப்பாக, முதுநிலை மருத்துவப் படிப்புக்காக வேறு மாநிலங்களுக்குச் செல்ல பெண்கள் பெரும்பாலும் தயங்கும் சூழலில், இந்த முறை அவர்களை அளவுக்கு மீறிப் பாதிக்கிறது. பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்வதிலும் இது பயனளிக்கவில்லை. மேலும், தாங்கள் செய்த முதலீட்டின் முழுப் பலனையும் மாநிலங்கள் பெற முடியாத நிலையை உருவாக்குகிறது.

### எச்சரிக்கை மணியாக அமைய வேண்டும்!

நாடு முழுவதும் நடைபெற்று வரும் மாணவர் போராட்டங்கள், தேர்வு நடத்தும் முறைகளை மட்டும் மேம்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்த்தும் எச்சரிக்கை அல்ல. பெரும் தொகையையும் காலத்தையும் பணயமாக கோரும் தேசிய நுழைவுத் தேர்வுகள் என்ற ஒட்டுமொத்தக் கட்டமைப்பையே அடிப்படையில் மீளாய்வு செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதற்கான எச்சரிக்கை மணியாக அவை அமைய வேண்டும்.

**என்னால் ஒவ்வொரு மாநிலத்திற்காகவும் பேச முடியாவிட்டாலும், தமிழ்நாட்டிற்காக என்னால் கண்டிப்பாகப் பேச முடியும். பாஜகவைத் தவிர தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ‘நீட்’ தேர்வை எதிர்க்கின்றன. ‘நீட்’ தேர்விலிருந்து விலக்குக் கோரி தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் மீண்டும் தீர்மானங்களையும் மசோதாக்களையும் நிறைவேற்றியுள்ளது.**

**நியாயப்படுத்த முடியாத ஒன்றை நியாயப்படுத்துவதை நிறுத்துங்கள், ‘நீட்’ தேர்வை முற்றிலும் ரத்து செய்யுங்கள்.**

**‘நீட்’ தேர்வு அடிப்படையிலேயே அநீதியானது மற்றும் அது ஒழிக்கப்பட வேண்டும்.**

மாநிலங்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், மருத்துவத் துறையினர் மற்றும் இதில் தொடர்புடைய அனைவரோடும் திறந்த மனதுடன் ஒன்றிய அரசு கலந்தாலோசிக்க வேண்டும். ஒற்றைத்துவத்தையே இறுதி இலக்காகக் கருதும் மனப்போக்கை அது கைவிட வேண்டும். இந்தியாவுக்குத் தேவை அதிகாரக்குவிப்பு அல்ல. மாநிலங்கள் மீதும், மாநில அரசுப் பள்ளிகள் மீதும், மாணவர்கள் மீதும் அதிக நம்பிக்கை வைப்பதே நாட்டின் இன்றைய தேவை.

மருத்துவக் கல்வியின் எதிர்காலம் இன்னும் நியாயமான, கூட்டாட்சித் தத்துவத்தை மேலும் மதிக்கும் அணுகுமுறையைக் கோருகின்றது.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கட்டுரையில் வலியுறுத்தி உள்ளார்.

---

## ‘நீட்’: டெல்லியை தொடர்ந்து

# தமிழ்நாட்டிலும் மாணவர்கள் கொந்தளிப்பு!

### ஆளுநர் மாளிகை நோக்கிப் பேரணி – இரயில் மறியல் – த.வெ.க. அரசு அராஜகம்!

**சென்னை, ஜூலை 24 -**

**நீட் தேர்வை ரத்துச் செய்யக் கோரி, தமிழ்நாட்டில் வகுப்புகளை புறக்கணித்து மாணவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒன்றிய அமைச்சர் பதவி விலகக் கோரி, மாணவ அமைப்பினர் ஆளுநர் மாளிகை நோக்கி பேரணியாக சென்றனர்.**



டெல்லியில், மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்தும், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதமர் பதவி விலக கோரியும், SFI மற்றும் DYFI மாணவ அமைப்புகள் சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை நோக்கி பேரணி மேற்கொண்டனர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தியதால் இருதரப்பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. போராட்டம் நடத்துவது ஜனநாயக கடமை, ஆனால் அதை தடுத்துவிட்டு, ஜனநாயகன் படத்திற்கு காவல்துறை பாதுபாப்பது அளிப்பது வேதனையளிப்பதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

### மதுரை

இதனிடையே, நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி டெல்லியில் போராடிய மாணவர்கள் மீதான தாக்குதலை கண்டித்தும் மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் வகுப்பை புறக்கணித்து போராட்டம் மேற்கொண்டனர். மதுரை அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கங் களை எழுப்பினர்.

### திருப்பரங்குன்றத்தில் ரயில் மறியல்!

டெல்லியில் நடைபெற்று வரும் மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து திருப்பரங்குன்றத்தில் மாணவர் அமைப்பினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வலியுறுத்தி இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தினர் இந்தியா ஜனநாயக வாலிபர் சங்கத்தினர், விவசாய சங்கத்தினர் உள்ளிட்ட சில அமைப்புகள் திருப்பரங்குன்றம் ரயில் நிலையத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் ஆர்ப்பாட்டம்!

நீட் தேர்வை கண்டித்தும், ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் சென்னையில் 3வது நாளாக நடைபெற்று வரும் மாணவர்களின் போராட்டத்துக்கு தி.மு.க. Gen Z குழு நேரில் ஆதரவு தெரிவித்தது.

நீட் தேர்வை கண்டித்தும், ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் சென்னை தியாகராயநகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாணவர் அமைப்பினர் 3வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், திமுக Gen Z குழுவினர் இவர்களை நேரில் சந்தித்து போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். அப்போது மாணவர்கள் மீதான ஒன்றிய, மாநில அரசுகளின் அடக்குமுறைகளுக்கு கண்டனம் தெரிவித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

### அனிதாவின் சகோதரர் ஆதரவு!

இதேபோல், இப்போராட்டத்துக்கு அனிதாவின் சகோதரர் மணிரத்தினமும் ஆதரவு தெரிவித்துள்ளார். அனைவரும் ஒன்று சேர்ந்து போராடினால் பாசிச பா.ஜ.க., அரசை வீழ்த்தலாம் என்றும், நீட்டில் இருந்து விலக்கு பெறலாம் என்றும் தெரிவித்தார்.

### ஆளூர் ஷாநவாஸ்கான் ஆதரவு!

சென்னையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகமான பாலன் இல்லத்தில், நீட் தேர்வுக்கு எதிராக போராடி வரும் மாணவர்களை விசிக நிர்வாகி ஆளூர் ஷாநவாஸ் சந்தித்து ஆதரவு தெரிவித்தார். மாணவர்கள் மத்தியில் பேசிய அவர், நீட் தேர்வுக்கு எதிரான டெல்லி போராட்டம் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளதாகத் தெரிவித்தார். நீட் தேர்வுக்கு எதிரான விதை தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் போடப்பட்டது என்றும், இதற்கான முக்கிய காரணம் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் என்றும் ஷாநவாஸ் கூறினார்.

### இயக்குநர் சீனு ராமசாமி வலியுறுத்தல்!

ஒன்றிய அரசு நீட் தேர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று இயக்குநர் சீனு ராமசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக இயக்குநர் சீனு ராமசாமி வெளியீட்டுள்ள சமூக வலைதள பதிவில்., நீட் தேர்வு முறை வந்த நாள் முதல் கல்வியாளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு நிலவி வருவதாக குறிப்பிட்டுள்ளார். நீட் தேர்வில் ஊழல்களும் முறைகேடுகளும் மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி, இந்தியா முழுக்க உயிரிழப்புகளும், டெல்லியில் மாணவர்களின் போராட்டமும் நடைபெறுவதாக கூறியுள்ளார்.

தன் இயக்கத்தில் உருவான ‘கண்ணே கலைமானே’ திரைப்படத்தில் இந்த நீட் தேர்வின் கொடூர முகத்தையும், அதனால் மாணவர்கள் எதிர்கொள்ளும் வலிகளையும் அப்போதே ஆழமாகப் பதிவு செய்துள்ளதாக இயக்குநர் சீனு ராமசாமி குறிப்பிட்டுள்ளார். ஒன்றிய அரசு இதை அரசியலாகப் பார்க்காமல், மாணவர்களின் உயிரையும் நலனையும் கருத்தில் கொண்டு உடனடியாக நீட்டைத் திரும்பப் பெற வேண்டும் எனவும் சீனு ராமசாமி வலியுறுத்தியுள்ளார்.

---

## நாகர்கோவிலை அடுத்து

# தூத்துக்குடியிலும் ஒரு லாக்அப் மரணம்!

### இளைஞரை அடித்துக் கொன்று போலீஸ் அராஜகம்!

*தூத்துக்குடி, ஜூலை 24 -*

தூத்துக்குடியில் மேலும் ஒரு லாக்அப் மரணம் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்ட இளைஞர் மர்ம மரணம் போலீஸார் அடித்துக் கொன்றுவிட்டதாக உறவினர்கள் குற்றச்சாட்டு இளைஞரின் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம்

தூத்துக்குடியில் விசாரணைக்கு அழைத்துச் சென்ற இளைஞர் மர்மமான முறையில் உயிரிழந்தார். காவல்துறையினர் அவரை அடித்துக்கொலை செய்துவிட்டதாகக்கூறி உறவினர்கள் உடலை வாங்க மறுத்து போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்.

தூத்துக்குடி அமுதா நகர் பகுதியைச் சேர்ந்த நாகராஜனின் மகன் அருணாச்சலம், அரசு மதுபான கடை பாரில் வேலை பார்த்து வந்தார். கடந்த 17ஆம் தேதி மதுபான கடை மூடிய பின்பு சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்ததாக தென்பாகம் காவல்துறையினர் அருணாசலத்தை கைது செய்து, விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அடுத்த நாள் அருணாச்சலம் உடலில் பலத்த காயங்களுடன் தூத்துக்குடி அரசு மருத்து கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக காவல்துறையினர் சேர்த்துள்ளனர்.

இதுதொடர்பாக அவரது குடும்பத்தினரிடம் போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். இதனிடையே, சிறையில் போலீசார் தாக்கியதால் தலையில் காயம் ஏற்பட்டதாக, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அருணாச்சலம் கடைசி வாக்கு மூலம் அளித்துள்ளார்.

தனது மகனை போலீசார் அடித்துக் கொன்றுவிட்டதாக தாய் குற்றச்சாட்டு இளைஞரின் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம் நான்கு நாட்களாக சிகிச்சை பெற்று வந்த அருணாசலம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். காவல்துறையினர் அடித்ததால்தான் தனது மகன் உயிரிழந்ததாக கூறி அவரது பெற்றோர் உடலை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**அருணாச்சலம் குடும்பத்திற்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்த கீதாஜீவன்!**

உயிரிழந்த அருணாச்சலம் குடும்பத்திற்கு தி.மு.க. உறுதுணையாக இருக்கும் - கீதாஜீவன் இதனிடையே, பெற்றோரின் அனுமதி இன்றி அருணாச்சலத்தின் உடல் பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனையறிந்து மருத்துவமனைக்கு சென்ற, முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்து இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்தார். அருணாச்சலத்தை தாக்கிய காவல்துறையின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்வரை, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தி.மு.க. உறுதுணையாக இருக்கும் என தெரிவித்தார்.

---

## இன்றைய நாள்

# தமிழ்நாட்டில் ‘அரசு’ என்ற ஒன்று உள்ளதா?

### கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**சென்னை, ஜூலை 24 -**

**“தூத்துக்குடியில் ஒரு இளைஞர் காவல்துறையினரின் சித்ரவதைக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். இந்நிலையில் முதல்வர் உள்ளிட்ட அமைச்சர்களும், அதிகாரிகளும் சினிமா பார்க்கச் சென்றுவிட்டனர். இன்றைய நாளில் தமிழ்நாட்டில் ‘அரசு’ என்ற ஒன்று உள்ளதா? என்பதே சந்தேகம்தான் என்று கழகத் துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**நாகர்கோவிலைத் தொடர்ந்து தூத்துக்குடியிலும் காவல்துறையின் சித்திரவதைக்கு உள்ளாகி இளைஞர் ஒருவர் உயிரிழந்திருக்கும் செய்தி வேதனை யளிக்கிறது.**

**காவல்துறைக்குப் பொறுப்பு (?) வகிக்கும் முதலமைச்சர் விஜய் அவர்கள் உட்படப் பல அமைச்சர்களும் அதிகாரிகளும் திரைப்படம் பார்க்க விடுப்பில் சென்றுள்ளதால், இன்றைய நாள் தமிழ்நாட்டில் ‘அரசு’ என்ற ஒன்று உள்ளதா என்பதே சந்தேகம் தான்!**

**நாளை பணிக்குத் திரும்பிய பின்னாவது, இந்த காவல் மரணம் குறித்து வாய் திறக்கிறார்களா என்று பார்ப்போம்.**

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.